# 7 உயிர்ப்பின் நற்செய்தி

**எமது பாவங்களில் இருந்து விடுதலையைப் பெற்றுத்தர, இயேசு துன்பங்களை அனுபவித்து சிலுவையில் தன் உயிரைத் தியாகம் செய்தார். மூன்றாம் நாள் அவர் உயிரோடு எழுந்து உயிருள்ள தெய்வமாக இருக்கின்றார். இயேசுவின் உயிர்ப்பின் நற்செய்தியை நாம் இப்பாடத்தில் கற்போம்.**

ஓய்வு நாளுக்கு பின் வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் பெண்கள் கல்லறையைப் பார்க்க சென்றார்கள். அக்காலத்துப் பாரம்பரிய வழக்கப்படி உடலில் பூசுவதற்கென்று நறுமணப் பொருட்களை அவர்கள் கொண்டு சென்றனர். ஆனால் அவ்விடத்தில் எதிர்பாராத நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

மகதலா மரியா : ஆ.....ஆ....எனக்குப் பயமாக இருக்கின்றது.

மரியா : அதோ! ஆண்டவரின் தூதர் கல்லறை மூடியிருந்த கல்லை புரட்டி அதன் மேல் உட்கார்ந்திருக்கின்றார்.

மகதலா மரியா : எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஒளியால் என் கண்கள் மூடப்பட்டுள்ளன.

மரியா : எனக்கு அவர் வானதூதர் போன்று தான் தோன்று கின்றார். அவரது தோற்றம் மின்னல் போன்றும், ஆடை வெண்மையாகவும் தெரிகின்றது.

மகதலா மரியா : அதோ பாருங்கள்! காவல் வீரரும் நடுங்குகின்றனர்.

வானதூதர் : நீங்கள் அஞ்சாதீர்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை தேடுகின்றீர்கள் என எனக்கு தெரியும். அவர் இங்கே இல்லை. அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். வாருங்கள்! அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்.

மகதலா மரியா : என்ன? அவர் இங்கே இல்லையா? அவர் உயிர்த்து எழுந்து விட்டாரா?

வானதூதர் : நீங்கள் விரைந்து சென்று இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் என சீடருக்கு சொல்லுங்கள். உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்கு போய்க் கொண்டிருக்கின்றார். அங்கே நீங்கள் அவரைக் காண்பீர்கள்.

மகதலா மரியா : நாங்கள் விரைவாகப் போய் சீடர்களுக்கு கூறுவோம்.

மரியா : ஆமாம்! எனக்கென்றால் இது புதுமையானதொரு அனுபவம்.
(இந்நிகழ்வைக் கண்ட பெண்கள் அச்சமுற்றனர். அதேவேளையில் பெருமகிழ்ச்சி அடைந்தவர்களாய் உயிர்ப்பின் வெற்றிச் செய்தியை சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். அவ் வேளையில்...........)

இயேசு : வாழ்க!

இரு பெண்கள் : இயேசுவா? என்ன ஆச்சரியம்!

மகதலா மரியா : இயேசுவைப் பணிந்து கொள்வோம் வாருங்கள்.

இயேசு : ‘‘அஞ்சாதீர்கள்! என் சகோதரரிடம் சென்று அவர்களை கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்.




இயேசு சிலுவையில் அறையப்பட்டதின் நிமித்தம் எதுவித எதிர்பார்ப் புக்களும் இன்றி துணிவற்று வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் புத்தொளியை அளித்தது.

முதலாவதாக, உயிர்ப்பின் வெற்றியைக் கண்ட பெண்கள் ஒளியின் செய்தியை ஓடோடிச் சென்று சீடர்களுக்கு கூறினார்கள்.

இயேசுவின் உயிர்த்தெழுதலை முதன் முதலாக கண்ட பெண்களே வெற்றியின் செய்திக்கு முதல் சாட்சியாளர் ஆவர்.

**இயேசுவின் உயிர்த்தெழுதலின் செய்தியைப் பெண்கள் மூலமாகக் கேட்ட சீடர்கள் வாழ்வில் புத்தொளியைப் பெற்றனர்.**

அது எவ்வாறு?

உரோம பேரரசு மற்றும் பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர் போன்றவர்களின் ஏகாதிபத்தியத்தில் யூதர் பல துன்பங்களை அனுபவித்தனர். இவற்றிலிருந்து அவர்களை மீட்பதற்காக மெசியா எனும் மீட்பர் உலகில் உதிப்பார் என இறைவாக்கினர் இறைவாக்கு உரைத்திருந்தனர்

இதற்கேற்ப, இயேசு தம்மை விடுவிக்கும் மெசியா என யூதர்கள் எதிர்பார்த்தனர். இயேசு எருசலேமுக்கு வெற்றி ஆரவாரத்துடன் பவனி செய்த நிகழ்வில் மக்களின் செயற்பாட்டிலிருந்து இது தெளிவாகின்றது.

ஆனால் யூத மக்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாக இயேசு மண்ணுலகில் தமது பணியை நிறைவு செய்து, பல துன்பங்களை அனுபவித்து சிலுவையில் தமது உயிரை அர்ப்பணித்தார். இந்த நிகழ்வானது இயேசுவின் சீடர்களுக்கு மாத்திரமல்ல, யூத மக்களுக்கும் அனைத்து எதிர்பார்ப்புகளும் அற்று போக ஒரு காரணியாக அமைந்தது.

*ஆனாலும் கல்லறைக்கு சென்ற பெண்களுக்கு கிடைத்த செய்தி ''அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்'' என்பதாகும். இது சீடர்களின் வாழ்வில் புதிய எதிர்பார்ப்பைக் கொடுத்தது. அவர்கள் புதுவாழ்வில் புத்தொளி பெற்றனர்.*

*அன்று சீடர்கள்*

**''இயேசு உயிர்த்தெழுந்தார்'' என பெண்கள் சான்று பகர்ந்த வெற்றியின் செய்தியைக் கேட்ட சீடர்கள் எவ்வாறு செயற்பட்டனர்?**

*இயேசு சிலுவையில் அறையப்பட்டதன் பின்னர் சீடர்கள் முன்னர் பழக்கப்பட்ட வாழ்வுக்கு மீண்டும் செல்ல முற்பட்டனர். என்றாலும் உயிர்ப்பின் ஒளியால் இயேசுவின் 'வாழும் தொனி' யாக செயற்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இயேசுவுடன் இணைந்து வாழ்ந்த இவர்கள் அவரது அளப்பரிய அன்பையும், தியாகவாழ்வையும் முன்னுதாரணமாகக் கொண்டு வாழ முற்பட்டனர். 'இயேசுவின் உயிர்த்தெழுதல்' எனும் செய்தி எமக்கு உரித்தாகும் நிலைவாழ்வுக்கு சான்று பகர சீடர்கள் துணிவு பெற்றனர். அதற்காக அவர்களது வாழ்வை அர்ப்பணிக்கவும் பின்வாங்கவில்லை.*

**இன்று நாம்**

**இயேசுவின் உயிர்ப்பால்
புத்தொளி பெற்று வாழ்கின்றோம்.**

**இயேசு எமக்காக செய்த அர்ப்பணிப்பின் வாழ்வால் நாம்
பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றவர்களாக வாழ்கின்றோம்.**

**பாவங்களுக்கு மன்னிப்பு பெற்று இயேசுவின் உயிர்ப்பின்
ஊடாக நிலைவாழ்வுக்கு உரிமை பெற்றுள்ளோம்.**

**அன்று**

''அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்'' என்று வானதூதர்
கூறிய செய்தி முதன்முதலாக பெண்களுக்கு கிடைத்தது.
அவர்கள் புதுப்பெலனடைந்து விரைந்து சென்று அதை
சீடர்களுக்கு கூறினார்கள்.

அப்போது
சீடர்கள் இயேசுவின் குரலாக மாறினர். உயிர்ப்பின் செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்ந்தனர்.

அதற்கேற்ப
அன்று பெண்களும் சீடர்களும் செயற்பட்டது போன்று நாமும் உயிர்ப்பின் செய்திக்கு சான்று பகர வேண்டும்.

இயேசுவின் உயிர்ப்பின் செய்திக்கு நாம் சான்று பகர வேண்டும்.

வாசிப்போம்:
லூக்கா 10 : 27
யோவான் 13 : 34
யோவான் 13 : 35
மத்தேயு 5 : 14

*மனனவசனம்:*
*மத்தேயு 28 : 19*

எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்;தந்தை மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்

செயற்பாடு

1. கல்லறைக்கு சென்ற பெண்களுக்கு இயேசுவைக் குறித்து கிடைத்த செய்தி யாது?

2. இயேசுவின் உயிர்ப்பால் எமக்கு கிடைக்கும் விசேட வரப்பிரசாதங்கள் யாவை?